# நாளும் ஓர் திருமுறை

# THIRUMURAI A DAY

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தர் அற்புதம்

## திருமறைக்காடு - கதவடைக்கப்பாடியபதிகம்




| | | |
|---|---|---|
| இறைவர் திருப்பெயர் | : | வேதாரண்யேஸ்வரர், மறைக்காட்டு மணாளர் |
| இறைவியார் திருப்பெயர் | : | யாழைப்பழித்த மொழியாள் |
| தல மரம் | : | வன்னி |
| தீர்த்தம் | : | வேத தீர்த்தம், கடல்துறை, மணிகர்ணிகை, தேவபூஷணம் |
| வழிபட்டோர் | : | வேதங்கள், இராமர், அகத்தியர், முசுகுந்த சக்கரவர்த்தி, |

கௌதமர், விசுவாமித்ரர், வசிஷ்டர், நாரதர், பிரமன், கங்கை, காவிரி.

தேவாரப் பாடல்கள் : 1. சம்பந்தர் -
1. சிலைதனை நடுவிடை,
2. சதுரம் மறைதான்,
3. பொங்கு வெண்மணற்,
4. கற்பொலிசு ரத்தினெரி,
5. விடைத்தவர் புரங்கள்.

2. அப்பர் -
1. இந்திரனோடு தேவர் இருடிகள்,
2. தேரையு மேல்க டாவி,
3. ஓதமால் கடல் பாவி,
4. பண்ணின் நேர்மொழி,
5. தூண்டு சுடரனைய சோதி.

3. சுந்தரர் -
1. யாழைப் பழித்தன்னமொழி

## தல வரலாறு

- வேதங்கள் வழிபட்டதால், இப்பெயர் பெற்றது.
- அகத்தியருக்குத் திருமணக் காட்சி நல்கிய திருத்தலம்.
- வேதங்களால் அடைக்கப்பட்டத் திருக்கதவினை, அப்பரடிகள் திறப்பிக்கவும், ஞானசம்பந்தர் திருக்காப்பிடவும் பாடியப் பெருமைப் பெற்றத் தலம்.
- இராமர், இராவணனை கொன்ற பழி நீங்கப் பூஜித்த தலமாதலால், இஃது கோடிக்கரை என்றும் வழங்கப்படுகிறது.
- இக்கோவிலில் எரியும் விளக்கில் இருந்த நெய்யை உண்ணுவதற்கு வந்த எலி, அணையும் நிலையில் இருந்த திரியைத் தூண்டி, மறு பிறப்பில் மாவலிச் சக்கிரவர்த்தியாகப் பிறந்தது. இச்செய்தியை, அப்பரடிகள் திருக்குறுக்கைத் தல தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

- முசுகுந்தச் சக்கரவர்த்தி தியாகேசப் பெருமானை எழுந்தருளுவித்த ஏழு விடங்கத் தலங்களுள்ஒன்று (தியாகர் - புவனவிடங்கர்; நடனம் - ஹம்ச நடனம்; மேனி - மரகத் திருமேனி; ஆசனம் - இரத்தின சிம்மாசனம்).

### சிறப்புகள்

- திருவிளையாடற் புராணம் அருளிய பரஞ்சோதி முனிவர் அவதாரத் தலம். பரஞ்சோதி முனிவரே இக்கோவில் தலபுராணத்தை அருளிச் செய்துள்ளார்.

பதிக வரலாறு :

பண் : **இந்தளம்**



மேதினிமேற் பொய்மிகுத்து , ஆதி அருமறை வழக்கமும் அரனடியார்பாற் பூதிசாதன விளக்கமும் முறையே அருகிப் போற்றல்பெறாது ஒழியக்கண்டு , இடர் உழந்த சிவபாத இருதயர் புரிந்த தவப்பயனாகப் , பரசமயம் நிராகரித்து நீறாக்கும் பொருட்டுத் திருவவதாரஞ்செய்த முதல்மறைப் பிள்ளையார் , திருமறைக்காட்டை அடைந்தார் . அங்கு , முன்பே சென்ற திரு நாவுக்கரசு நாயனாரைக் கூடினார் . திறப்பும் அடைப்பும் இல்லா திருந்த திருக்கோயிற் கதவங்களைத் திறக்கவும் மூடவும் முறையே இருவரும் பாடியருளினர் . அவதார காரணங்களி ரண்டனுள் ஒன்றான வேதநெறி தழைத்தோங்குதலை வேதாரணியத்துள் தொடங்கி நிறுவியருளிய உண்மையை உணர்த்து வது இத்திருப்பதிகம். (thevaaram.org)

# நாளும் ஓர் திருமுறை

# THIRUMURAI A DAY

**சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்**
**மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா**
**இதுநன் கிறைவைத் தருள்செய் கவெனக்குன்**
**கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.01**

பொழிப்புரை :

இனிய பொழில்கள் சூழ்ந்த திருமறைக்காட்டில் வேதங்கள் நான்கும் துதி செய்து வணங்க வீற்றிருக்கும் வலியோனே! உன் திருக்கோயில் கதவுகள் முன் உள்ளவாறே திருக்காப்புக் கொள்ளும் கருத்தோடு வினவிய இக்கேள்விகளுக்கு எனக்கு நல்ல வண்ணம் விடை அருள்வாயாக.

குறிப்புரை :




சதுரம் மறை - நால்வேதம். (மகரவொற்று விரித்தல்) மதுரம் - தேனினிமை. இறை - விடை. மறை துதிசெய்து வணங்கும் காரணத்தால் மறைக்காடு என்றான உண்மையை உணர்த்தியருளியவாறறிக. பின்வருவன வினாக்களாதலின், அவற்றிற்குச் `செவ்வனிறையோ இறைபயத்தலோ செய்க` என்பார், `இறைவைத்தருள் செய்க` என்றருளினார். `எனக்கு அருள்செய்க` என்று இவ்வாறு வேண்டுவது ஆசிரியர் திருவாக்கில் வேறு எங்கும் காண்டல் அரிதாகும். இதற்குப் பிறர் உரைத்தது பொருந்துமோ? (thevaaram.org)

திருச்சிற்றம்பலம்